9th April 1960]

National Research Institute

* 647 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the National Research Institute requested the Government to give space to locate the Institute in this State itself, before it was shifted to Hyderabad; and

(*b*) the reason for refusing space for this Institute ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) It is presumed that the hon. Member refers to the Nutrition Research Laboratory. The Secretary, Indian Council of Medical Research, asked for information regarding the availability of a suitable site in Madras for the location of the Laboratory.

(*b*) Space was not refused. In fact the availability of a number of premises in the City was notified to the Government of India and the Indian Council of Medical Research for their consideration.

Regional language as medium of instruction

* 648 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are watching the progress of the college or colleges in which the regional language has been introduced as medium of instruction;

(*b*) if so, the nature of the progress;

(*c*) whether any text-books in subjects like History, Economics, Logic, Philosophy and the like have been published; and

(*d*) if not, the steps taken by the Government to bring out those text-books for the guidance of the students ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) The Regional Language has not been introduced as medium of instruction so far in any of the colleges in this State. It is proposed to be introduced in Government Arts College, Coimbatore, in 1960-61 in the first year of the three year B.A. Degree classes.

(*b*), (*c*) & (*d*) The progress reports [a] on the work of the College Tamil Committee submitted by its Chairman (Sri G. R. Damodaran) which meet the points raised are placed on the table of the House for information.

SRI T. S. RAMASWAMI: Sir, in the report it is stated, 'The Committee hoped that it would be possible to bring out the books by the beginning of May at the earliest and not later than middle of June at the latest, depending upon the time taken for getting the consent of the foreign publishers for translating the various books.' Sir, may I know whether any books have been made ready for the coming academic year, as the month is fast approaching ?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, it is already stated that it would be ready by the month of May. Some of the books are already ready.

---

[a] Printed as Appendix on pages 308–336 infra.

[9th April 1960

Sri K. ANBAZHAGAN : புதிய மூன்று ஆண்டு பட்டப் படிப்பிற்குத் தமிழ் மொழியிலே பாடம் போதிப்பதற்கான திட்டம் அடுத்த ஆண்டில் வருகிறபொழுது, அதற்கு முதல் ஆண்டில் ' ப்ரீ யுனிவர்ஸிடி வகுப்பு' என்று சொல்லப்படுகின்ற புகுமுக வகுப்பில் பாடங்கள் இந்த ஆண்டில் தமிழிலே நடத்தப்பட்டுள்ளதா ? அப்படி நடத்தப்படாமல் இருக்குமானால், மேல் படிப்பில் தமிழ் போதனா மொழியாக வரும்பொழுது இடற்பாடுகள் ஏற்படும் என்று அரசாங்கம் கருதவில்லையா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ப்ரீ யுனிவர்சிடி வகுப்பில் இருக்கக்கூடிய முக்கியமான கஷ்டம் என்னவென்று சொன்னால், எல்லா பாடங்களும் அங்கே ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் எல்லா பாடங்களையும், சயன்ஸ், ஹிஸ்டரி எல்லாவற்றையும் மாணவர்கள் எடுத்தாக வேண்டும். இதிலே படிப்பவர்களில் பல பேர்கள் அடுத்தாற்போல் சயன்ஸ் எடுப்பார்கள். ஆகையால் அவர்களுக்கு ஓரளவாவது இங்கே ஆங்கிலப் பயிற்சி ஏற்பட்டால்தான் என்ஜினியரிங் காலேஜ், மெடிகல் காலேஜ் போன்றவைகளில் அவர்கள் பிறகு சேர்ந்து படிக்க முடியும். ஆகையினால் இந்த ஒரு வருஷத்தில் தமிழை போதனா மொழியாக வைத்தால் கஷ்டம் ஏற்படும். அதோடுகூட, இந்தத் திட்டம் 1963–64-ல் அமுலுக்கு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஏனென்றால் 1963–64-ல் தான் ப்ரீ யுனிவர்சிடி கிளாஸ் போய், ஹையர் செகண்டரி கிளாஸ், 11-வது ஸ்டாண்டர்டு ஏற்படும். அப்பொழுது ப்ரீ யுனிவர்சிடி கிளாஸுக்கு அவசியம் இல்லாமல் உயர்நிலைப் பள்ளியிலிருந்தே நேராக மாணவர்கள் மற்ற படிப்புகளுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இப்பொழுது இருக்கக்கூடிய ப்ரீ யுனிவர்சிடி கிளாஸ் அப்பொழுது இருக்காது.

Sri M. KALYANASUNDARAM : ஒரே கல்லூரியில் பரீட்சார்த்தமாக தமிழ் போதனா மொழியாக்கப்படுவது சம்பந்தமாக யுனிவர்ஸிடியை கலக்காமல் ஏதோ அரசாங்கம் அவசரப்பட்டு காரியங்கள் செய்வதுபோன்ற புகார்கள் சொல்லப்படுவது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ? இது சம்பந்தமாக சர்க்காருக்கும் யுனிவர்சிடிக்கும் இடையே முரண்பாடுகள் ஏதாவது உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது கேள்வி நேரத்தில் பதில் சொல்லித்தீர்க்கக்கூடிய ஒரு விஷயம் அல்ல. ஆகையினால், கல்வி மான்யக் கோரிக்கை சபை முன்னால் வரும்பொழுது அதுபற்றி விரிவாக நாம் விவாதிக்கலாம். அதுபற்றிய எல்லாவிதமான தகவல்களும் அச்சடித்து அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும்.

Sri K. VINAYAKAM: Sir, are there any lecturers and professors who can handle these classes in the regional language medium ? Does the Hon. Minister think that the professors and lecturers who have been trained and who have studied these subjects in the English-language medium in their colleges, when appointed in future, will be able to handle these classes in the regional-language medium, or in the alternative, is it proposed to give some special training to these lecturers and professors ?

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, among the existing teachers, there are many who are competent and proficient in the Tamil language and who will be in a position to express their ideas in Tamil. In addition to that, it is the intention of the Government to have a re-orientation course for about a month or six weeks so that all the difficulties arising in expressing themselves in Tamil could be removed.

Sri K. ANBAZHAGAN : பல்கலைக் கழக புகுமுக வகுப்பில், ப்ரீ யுனிவர்ஸிடி வகுப்பில், முழுதும் தமிழிலேயே பாடம் நடத்துவது அவ்வளவு பயன் தராது என்ற கருத்தை அமைச்சரவர்கள் சொன்னார்கள் ; ஆனாலும், தமிழிலேயே படிக்க வேண்டும் என்று யார் யார் விசேஷமாக

9th April 1960]

விரும்புகிறார்களோ, அவர்களுக்கு மட்டிலாவது தேர்ந்தெடுக்கும் (ஆப்ஷனல்) பாடமொழியாக அமைக்கும் முறையிலே, தமிழ் படிக்க இருக்கும் முட்டுக் கட்டையை அகற்ற, தடையை நீக்க, அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அதைத்தான் சொன்னேன். ப்ரீயுனிவர்ஸிடி வகுப்பே இல்லாமல் போகப் போகிறது. இடைக்காலத்தில், அதுவும் எல்லா மாணவர்களுக்கும் இல்லாமல், ஒரு சிலருக்காக மட்டும் தனிப்பட்ட முயற்சிக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

Sri A. A. RASHEED: Is it a fact that a few years back the National College, Tiruchirappalli, and the Municipal College, Salem, introduced the regional language as medium of instruction and later on gave it up for want of popular support and because of difficulties experienced ?

The Hon. Sri C. SUBRAMANIAM: That is always the difficulty with half-hearted attempts made without making full preparation, when we launch upon a new project. That is why we are trying our best to see that preparations are made adequately and proper atmosphere created and all the difficulties in implementing the scheme are removed.

Sri A. GOVINDASAMY: ஸார், வட்டார மொழியிலே பாடம் கற்பிப்பது என்ற போது, கோயம்புத்தூர் மாவட்டத்தை முதலில் எடுக்கக் காரணம் என்ன ? மற்ற மாவட்டங்களில் எடுத்தால் எதிர்ப்பு இருக்கும் என்ற காரணத்தினாலா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: முதலில் சர்ச்சைக்கு வந்தது, சர்க்கார் பள்ளியில் செய்வதா அல்லது, தனிப்பட்டோர் பள்ளியில் செய்வதா என்பது. அதை முதலில் தீர்மானிக்க வேண்டியிருந்தது. தனிப்பட்டவர்கள் கல்லூரியைவிட, சர்க்கார் கல்லூரியில் வைப்பதே சரி என்று தீர்மானிக்கப்பட்ட பிறகு, எந்தக் கல்லூரி என்ற பிரச்னை எழுந்தது. இன்று சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் ஆர்ட்ஸ் கல்லூரிகள் இருக்கின்றன. இங்கே, பல மொழி பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். முன்பு இதுவே "மகம்மடன் காலேஜ்" ஆக இருந்தது, அதைப்போய் தமிழுக்கு எடுத்தால், நகரத்தில் பல மொழி பேசுகிறவர்கள் இருப்பதனால், அது தவறாக இருக்கும் என்று நினைத்து, கோயம்புத்தூர் கல்லூரியை, அதுவும் வைஸ்-சான்சலர் அவர்களே கோயம்புத்தூர் கல்லூரியே சிறந்தது என்றதின் பேரில், அது தேர்ந்தெடுக்கப்பட்டது.

Sri T. S. RAMASWAMI: குறிப்பிட்ட கல்லூரியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களுக்கான கலைச் சொற்கள் முதலியவை ஸ்டாண்டர்டைஸ் செய்து, எல்லா மாணவர்களுக்கும் வழக்கமாக வரக்கூடிய அளவுக்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் ? மேல் படிப்புக்குத் தடையில்லாமல், மாணவர்களுக்கு நல்ல முறையிலே அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: கலைச் சொற்கள் பகுதி பகுதியாக அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது. வழக்கமாக வருவதற்கு, கலைச்சொற்கள் வழக்கத்தில் வரவேண்டும். அப்படி வரும் காலத்தில், மாறுதல்கள் வேண்டும் என்றால், கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன்.

Raw Film Factory

*649 *Q.*—**Sri A. A. RASHEED**: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to purchase shares of the raw film factory by this Government; and

(*b*) if so, the amount of share to be purchased ?